பக்கங்கள் 16 + 3

மாலை முரசு

முழக்கம்: 02 | வள்ளுவ ஆண்டு 2055 | கார்த்திகை 17 வெள்ளிக்கிழமை 06.11.2024 | அதிர்வு 127

# வயோதிபப் பெண் சுட்டுப் படுகொலை



அநுராதபுரம் - பதவிய பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதி யில் நேற்று இரவு வயோதிபப் 02

‘கனடா முரசு’ இணைக்கப்பட்டுள்ளது

இங்கே CLICK செய்யவும்



# ஜீவனை வென்ற சிறீதரன்!

## அரசமைப்புக் கவுன்ஸிலுக்கு எதிர்க்கட்சித் தரப்பின் பிரதிநிதியாகத் தெரிவு

அரசமைப்புக் கவுன்ஸிலுக்கு எதிர்க் கட்சித் தரப்பின் பிரதிநிதியைத் தெரிவு செய்வதற்காக பிரதான எதிர்க்கட்சி தவிர்ந்த ஏனைய கட்சிகளுக்கு இடையில் இடம்பெற்ற தேர்தலில் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் நாடாளுமன்றக் குழுத் தலைவர் சிவஞானம் சிறீதரன், ஐக்கிய தேசியக் கட்சியின் சார்பில் போட்டியிட்ட இலங்கைத் தொழிலாளர் காங் கிரஸின் செயலாளர் நாயகம் ஜீவன் தொண்ட மானை 11 இற்கு 10 என்ற வாக்கு 02



# நினைவேந்தலுக்கு 2011 முதல் அனுமதி

## ஜனாதிபதி அநுர விளக்கம்

“மாவீரர் நினைவேந்த லுக்குத் தற்போதைய அரசே இடமளித்துள்ளது என வெளி யாகும் தகவல்களில் எவ்வித உண்மையும் இல்லை. 2011 ஆம் ஆண்டு முதல் நினைவேந்தலுக் குச் சில கட்டுப்பாடுகளுடன் அனு மதி வழங்கப்பட்டுள்ளது.”

- இவ்வாறு ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க தெரிவித் தார்.

“இந்த நாட்டில் மீண்டும் மோதல்கள் ஏற்பட இடமளிக்க மாட்டோம். இது விடயத்தில் உறுதியான கொள்கையில் அரசு உள்ளது.” - என்றும் ஜனாதிபதி கூறினார். 02

# காவலாளியைக் கொலை செய்துவிட்டு ஒன்பது இலட்சம் ரூபா பணம் கொள்ளை

## நுவரெலியாவில் அதிகாலை பயங்கரம்




நுவரெலியா இ.போ.ச. டிப்போ காவ லாளியைப் படுகொலை செய்துவிட்டு டிப்போவில் வைக்கப்பட்டிருந்த சுமார் ஒன்பது இலட்சம் ரூபா பணம் கொள்ளை யடிக்கப்பட்ட சம்பவம் தொடர்பில் நுவ ரெலியா பொலிஸார் 02

# கிண்ணியாவில் ஆணின் சடலம்

திருகோணமலை, கிண்ணியா பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பைசல் நகர் பகுதியில் நேற்று வியாழக் கிழமை இரவு ஆண் ஒருவர் சடலமாக மீட்கப்பட்டுள்ளார் என்று கிண்ணியா பொலிஸார் தெரிவித்தனர்.

கிண்ணியா, பைசல் நகர் பகுதி யைச் சேர்ந்த 55 வயதுடைய நபரே 02

# சுற்றுலாப் பயணியைத் தாக்கி தொலைபேசியை பறித்த வட்டவளை இளைஞர்கள் இருவர் சிக்கினர்

## டிசம்பர் 18 ஆம் திகதி வரை விளக்கமறியல்



கொழும்பு - கோட்டையிலிருந்து பதுளை நோக்கிச் சென்ற உடரட்ட மெனிக்கே ரயிலில் பயணித்த வெளிநாட்டு பெண் ஒருவரைத் தடியால் தாக்கி, அவரின் கையடக்கத் தொலைபேசியைப் பறிமுதல் செய்தனர் எனக் கூறப்படும் இரண்டு சந்தேகநபர்கள் வட்டவளை பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

விசாரணைகளின் பின்னர் இரண்டு சந்தேகநபர்களும் ஹட்டன் நீதிவான் நீதிமன்றத்தில் நேற்று முற்படுத்தப்பட்ட நிலையில் இருவரையும் எதிர்வரும் 18 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு ஹட்டன் நீதிவான் நீதிமன்ற நீதிவான் உத்தரவிட்டுள்ளார்.

வட்டவளை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ரொசல்ல மற்றும் விக்டன் பகுதிகளைச் சேர்ந்த 23 மற்றும் 26 வயதுகளுடைய இருவரே இவ்வாறு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

கொழும்பு – கோட்டையில் இருந்து நேற்றுமுன்தினம் புதன்கிழமை எல்ல நோக்கிப் பயணித்துக்கொண்டிருந்த 36 வயதான ஸ்பெயின் நாட்டு பெண் சுற்றுலாப் பயணி, ரயில் கதவு பகுதியில் இருந்தவாறு தனது தொலைபேசி மூலம் வீடியோ எடுத்துக்கொண்டு பயணித்துள்ளார்.

ரயில் வீதிக்கு அருகில் இருந்த இரண்டு இளைஞர்கள் தனது கையைத் தடியால் தாக்கினர் எனவும், இதனையடுத்து 5 இலட்சம் ரூபா பெறுமதியான தொலைபேசி கீழே விழுந்துள்ளது எனவும், தனது தலைப் பகுதியிலும் காயம் ஏற்பட்டுள்ளது எனவும் குறித்த பெண் எல்ல சுற்றுலா பொலிஸில் முறையிட்டுள்ளார்.

ஹட்டனுக்கும், வட்டவளைக்கும் இடைப்பட்ட பகுதியிலேயே இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இதையடுத்து இது தொடர்பில் வட்டவளை பொலிஸாருக்குத் தெரியப்படுத்தப்பட்டது.

விசாரணை வேட்டையை முன்னெடுத்த பொலிஸார் அன்று இரவு சந்தேகநபர்கள் இருவரையும் கைது செய்தனர்.

வட்டவளை பொலிஸ் நிலையத்தக்கு நேற்று வந்த பாதிக்கப்பட்ட பெண் தனது கையடக்கத் தொலைபேசியைப் பெற்றுக் கொண்டார். விரைவாக செயற்பட்டு உரிய நடவடிக்கை எடுத்த பொலிஸாருக்கு அவர் நன்றி தெரிவித்தார்.

# முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

### கிண்ணியாவில்...

சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை கிண்ணியா பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

### நினைவேந்தலுக்கு...

இலத்திரனியல் ஊடகப் பிரதானிகளுடன் நேற்று வியாழக்கிழமை நடைபெற்ற சந்திப்பின்போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியதாவது:-

“2011 வர்த்தமானி அறிவித்தலின் பிரகாரம் நினைவேந்தலுக்கு இடமளிக்கப்பட்டுள்ளது. எனவே, தற்போதைய அரசால் புதிதாக வழங்கப்பட்ட அனுமதி அல்ல இது. புலிக்கொடி உட்பட அவ்வமைப்புக்குரிய சின்னங்களை, அடையாளங்களை பயன்படுத்த முடியாது எனவும் வர்த்தமானியில் கூறப்பட்டுள்ளது.

2022 ஆம் ஆண்டில் 121 இடங்களில் நினைவேந்தல் நிகழ்வுகள் நடந்துள்ளன. 50 ஆயிரத்து 52 பேர் அதில் பங்கேற்றுள்ளனர். 2023 இல் 159 இடங்களில் நடந்துள்ளன. 64 ஆயிரத்து 266 பேர் பங்கேற்றுள்ளனர் என்று பொலிஸ் தரவுகள் தெரிவிக்கின்றன.

2024 ஆம் ஆண்டில் 144 இடங்களில் நினைவேந்தல்கள் நடந்துள்ளன. 45 ஆயிரத்து 778 பேர் பங்கேற்றுள்ளனர்.

நிலைமை இவ்வாறிருக்க தற்போது தான் என்றுமில்லாதவாறு இப்படி நடக்கின்றது எனச் செய்திகள் வெளியிடப்படுகின்றன. 2011 இல் இருந்து இது நடந்துள்ளது. எனவே, இந்த ஆட்சியின் கீழ் அனுமதி வழங்கப்பட்டுள்ளது எனக் கூறப்படுவது பொய்யாகும்.இந்த நாட்டில் இனி இல்லை என்றளவுக்கு இரத்தம் சிந்தப்பட்டுள்ளது. எமது பரம்பரையினர் வடக்கிலும், தெற்கிலும் போரில் ஈடுபட்டுள்ளனர். உயிரிழப்புகள் இடம்பெற்றுள்ளன. எனவே, மீண்டும் அவ்வாறானதொரு நிலைமைக்கு இடமளிக்கக்கூடாது. இந்த விடயத்தில் நாம் உறுதியாகவே உள்ளோம்.

ஜனநாயக ரீதியில் நாம் அரசியல் செய்யலாம். எனினும், இனவாத, மதவாத அரசியலுக்கு இடமில்லை. இனவாதம் தலைதூக்க இடமளியோம்.” – என்றார்.

### வயோதிபப் பெண்...

பெண் ஒருவர் சுட்டுப் படுகொலை செய்யப்பட்டுள்ளார்.

மோட்டார் சைக்கிளில் வந்த அடையாளம் தெரியாத இருவர், வீட்டில் இருந்த பெண்ணைத் துப்பாக்கியால் சுட்டுவிட்டுத் தப்பிச் சென்றுள்ளனர்.

துப்பாக்கிச்சூட்டில் படுகாயமடைந்த பெண், பதவிய வைத்தியசாலையில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்ட பின்னர் உயிரிழந்துள்ளார்.

போகஹவெவ பகுதியைச் சேர்ந்த 73 வயதுடைய பெண்ணே துப்பாக்கிச்சூட்டுக்கு இலக்காகி உயிரிழந்துள்ளார்.

இந்தத் துப்பாக்கிச்சூட்டுக்கு ரி - 56 ரக துப்பாக்கி பயன்படுத்தப்பட்டிருக்கலாம் என்று பொலிஸார் சந்தேகம் வெளியிட்டுள்ளனர்.

துப்பாக்கிச்சூடு நடத்தப்பட்டமைக்கான காரணம் மற்றும் சந்தேகநபர்கள் தொடர்பில் இதுவரை எவ்வித தகவல்களும் வெளியாகவில்லை.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை பதவிய பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

### காவலாளியை...

விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

இன்று அதிகாலை வேளையில் இந்தக் கொலைச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

நுவரெலியா, கல்பாய பிரதேசத்தை சேர்ந்த கே. லோகேஸ்வரன் என்ற 85 வயதுடைய காவலாளியே இவ்வாறு கொலை செய்யப்பட்டுள்ளார்.

காவலாளியைக் கொன்றுவிட்டு டிப்போவில் இருந்த அலுமாரியில் இருந்து சுமார் ஒன்பது இலட்சம் ரூபா பணம் எடுத்துச் செல்லப்பட்டுள்ளது என்று ஆரம்பகட்ட விசாரணைகளில் தெரிய வந்துள்ளது.

காவலாளி தனக்குரிய பாதுகாப்பு அறைப் பகுதியில் இருந்தார் என்றும், அப்போது அவரின் தலைப் பகுதியில் கூரிய ஆயுதத்தால் தாக்கியே அவர் கொல்லப்பட்டுள்ளார் என்றும் தெரிய வந்துள்ளது.

கொலைச் சம்பவத்தின்போது டிப்போவுக்குப் பொறுப்பான உத்தியோகத்தரும், காசாளரும் டிப்போவில் தங்கியிருந்த போதிலும், அவர்கள் உறங்கிக் கொண்டிருந்த வேளையில் இந்தக் கொலை இடம்பெற்றுள்ளது என்று கொலைச் சம்பவம் தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்டு வரும் நுவரெலியா பொலிஸார் தெரிவித்தனர்.

நுவரெலியா லங்கம டிப்போவில் நேற்று வியாழக்கிழமை பிற்பகல் ஓடிய பஸ்களின் வருமானம் வங்கியில் வைப்பிலிடுவதற்காக அலுமாரியில் வைக்கப் பட்டிருந்தது என்று அந்த டிப்போவின் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

நுவரெலியா மாவட்ட நீதிமன்ற நீதிவான் பார்வையிட்டதன் பின்னர் விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு சடலம் பிரேத பரிசோதனைக்காக நுவரெலியா மாவட்ட பொது வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பில் நுவரெலியா பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

### ஜீவனை வென்ற...

வித்தியாசத்தில் தோற்கடித்தார்.

இன்று நாடாளுமன்றத்தில் இரகசிய வாக்கெடுப்பு மூலம் நடைபெற்ற தேர்தலில் அவர் வெற்றி பெற்றிருக்கின்றார்.

எதிர்க்கட்சித் தரப்பில் காஸ் சிலிண்டர் சார்பில் தெரிவான தேசியப் பட்டியல் எம்.பி. ஒருவரும், ரோஹித அபேகுணவர்தன எம்.பியும் இந்தத் தேர்வில் பங்குபற்றாத நிலையில் சிறீதரன் வெற்றி பெற்றிருக்கின்றார்.

இதேசமயம் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் சார்பில் நாடாளுமன்ற விவகாரக் குழுவுக்குப் பிரதிநிதித்துவப்படுத்தும் பொறுப்புக்கும் தம்மைத் தெரிவு செய்ய சிறீதரன் விருப்பம் தெரிவித்த போதிலும், அந்தப் பொறுப்பைச் சாணக்கியனுக்கு வழங்குவதென தமிழரசுக் கட்சியின் நாடாளுமன்றக் குழு தீர்மானித்திருப்பதாக அறியவந்தது.

# வளிமண்டல சுழற்சி காரணமாக வங்கக்கடலில் புதிய காற்றழுத்த தாழ்வுப் பகுதி உருவாகின்றது

## 12 ஆம் திகதி தமிழகம், இலங்கைக் கடற்கரையை நோக்கி நகரும்

**(திருச்சி எம்.கே. ஷாகுல் ஹமீது)**

வளிமண்டல சுழற்சி காரணமாக வங்கக்கடலில் புதிய காற்றழுத்த தாழ்வுப் பகுதி இன்று உருவாகின்றது. எதிர்வரும் 12 ஆம் திகதி தமிழகம், இலங்கைக் கடற்கரையை நோக்கி அது நகரும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தென்கிழக்கு அரபிக்கடல் மற்றும் அதனை ஒட்டிய பகுதிகளின் மேல் நிலவும் வளிமண்டல கீழடுக்கு சுழற்சி காரணமாக இன்று தமிழகத்தில் ஒருசில இடங்களிலும், புதுவை மற்றும் காரைக் கால் பகுதிகளிலும் இடி, மின்னலுடன் கூடிய, லேசானது முதல் மிதமான



மழை பெய்யக்கூடும் என்று சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித் திருந்தது.

இந்தநிலையில் வளிமண்டல சுழற்சி காரணமாக புதிய காற்றழுத்த தாழ்வுப் பகுதி நாளை உருவாக வாய்ப்புள்ளது என்று வானிலை ஆய்வு மையம் தெரி வித்துள்ளது.

இந்தியப் பெருங்கடல், தென்கிழக்கு வங்கக்கடல் பகுதியில் வளிமண்டல சுழற்சி ஏற்பட்டுள்ளது. இதன் காரணமாக தெற்கு வங்கக்கடலின் மத்திய பகுதி யில் நாளை காற்றழுத்த தாழ்வுப் பகுதி உருவாகின்றது.

இது மேற்கு – வடமேற்கு திசையில் நகர்ந்து தென்மேற்கு வங்கக் கடலை அடையும் என்றும், 12 ஆம் திகதி தமிழ கம், இலங்கைக் கடற்கரையை நோக்கி நகரும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# காதலியைப் பொல்லால் தாக்கி படுகொலை செய்த காதலன்!



காதலனால் பொல்லால் தாக்கப்பட் டுக் காதலி படுகொலை செய்யப்பட் டுள்ளார்.

இந்தக் கொடூர சம்பவம் இரத்தின புரி, சிறிபாகம பொலிஸ் பிரிவுக்குட் பட்ட கெடவல பகுதியில் இடம்பெற் றுள்ளது.

இரத்தினபுரி பகுதியைச் சேர்ந்த 23 வயதுடைய யுவதியே இதன் போது படுகொலை செய்யப்பட்டுள் ளார் என்று சிறிபாகம பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பில் மேலும் தெரிய– வருவதாவது,

கொலை செய்யப்பட்ட காதலி யும் சந்தேகநபரான காதலனும் நீண்ட நாட்களாகக் காதல் உறவில் ஈடு பட்டிருந்த நிலையில் சம்பவ தினத் தன்று இருவருக்கும் இடையில் தக ராறு ஏற்பட்டுள்ளது.

இதனால் கோபமடைந்த காதலன் தனது காதலியைப் பொல்லால் தாக்கிக் காயப்படுத்தியுள்ளார்.

காயமடைந்த காதலி கிலிமலை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக இரத்தின புரி வைத்தியசாலைக்கு மாற்றப்பட்ட பின்னர் சிகிச்சை பலனின்றி உயி ரிழந்துள்ளார்.

இதையடுத்து சந்தேகநபரான காத லன் பிரதேசத்தை விட்டு தப்பிச் சென் றுள்ளார் என்று சிறிபாகம பொலிஸார் மேலும் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பான மேலதிக விசா ரணைகளை சிறிபாகம பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# செம்பியன்பற்று வடக்கில் தொடர்ந்து சட்டவிரோத மண் அகழ்வு எனப் புகார்



யாழ். வடமராட்சி கிழக்கு – செம்பி யன்பற்று வடக்கு பகுதியில் தொடர்ந்து சட்டவிரோத மண் அகழ்வு மற்றும் மண் விநியோகம் இடம்பெற்று வருகின்றது என்று பிரதேச மக்கள் புகார் தெரி விக்கின்றனர்

அந்தப் பிரதேச மக்களால் ஏற்க னவே எச்சரிக்கை விடுவிக்கப்பட்ட போதும் இந்தச் சம்பவம் இடம்பெற்று வருகின்றது.

இந்தப் பிரதேசத்தில் மண் அகழ்வு மேற்கொண்டு பாரியளவு பள்ளங்கள் வந்துள்ளன எனவும், அதனால் பெருமளவு நீர் தேங்கி நிற்கின்றது எனவும் ஊர் மக்கள் தெரிவிக்கின்ற னர்.

இது தொடர்பாக மக்கள் மேல் இடங் களுக்கு ஏற்கனவே முறைப்பாடு செய் தும் அவர்கள் இதுவரை எந்த நடவடிக்கை யும் எடுக்கவில்லை என்றும் தெரிவிக் கப்படுகின்றது.

# தெல்லிப்பழை சோமசுந்தர ஐயர் மறைவு இந்து உலகுக்குப் பேரிழப்பாகும்

## சர்வதேச இந்துமதபீடம் அனுதாபம்



இந்திய பாரம்பரியத்தை கொண்டவரும் தெல்லிப்பழையை பிறப்பிடமாகவும் கொழும்பை வசிப்பிடமாகவும் கொண்ட சிவஸ்ரீ விஸ்வநாத ஐயர் சோமசுந்தர ஐயரின் ( நாராயண வாத்தியார்) மறைவு முழு இந்து உலகுக்கும் பேரிழப்பு என்று சர்வதேச இந்து மதபீட செயலாளர் சிவஸ்ரீ ராமசந்திர குருக்கள் பாபுசர்மா தனது அனுதாப செய்தியில் தெரிவித்துள்ளார்.

அவர் தனது அனுதாபச் செய்தியில் தெரிவித்துள்ளதாவது,

இலங்கையில்நடைபெறும் பெரும்பாலான கும்பாபிஷேகங்களை தலைமையேற்று நடத்தியவர். அதேவேளை தெல்லிப்பளை வேதாகம பாடசாலையை நிறுவி, தங்கமா அப்பு குட்டியின் அனு சரணையின் கீழ் அந்தண மாணவர்களை உருவாக்கி அந்தண சமூக மேம்பாட்டுக்குப் பாடுபட்டவர். அரும் பணியாற்றியவர்.

வேத வாத்தியார், வைதீக வாத்தியார் போன்ற பட்டங்களைப் பெற்ற இவர் அகில இலங்கை சமாதான நீதிவானும் ஆவார்.

இவரது மறைவு பெரும் இழப்பாகும். அவரது குடும்பத்தினருக்கும் அனுதாபத்தை தெரிவித்து, எல்லாம் வல்ல திருப்பதி வெங்கடேஸ்வர பெருமாள் மோட்ச லோக பிராத்திக்கு அருள வேண்டும் என்று தெரிவித்துள்ளார்.

# ஆத்மா சாந்தியடைவதற்கு பிரார்த்தனை செய்கிறோம்!

## இந்துக் குருமார் அமைப்பு இரங்கல் தெரிவிப்பு

நாராயண வாத்தியார் என்று நாம் எல்லோரும் அன்புடன் அழைத்து பணியும் சிவஸ்ரீ விஸ்வ நாராயண குருக்களின் தேகம்நீத்த செய்தி அறிந்து மிகவும் கவலை அடைந்தோம். ஓர் விப்ரசிரேஷ்டராக பல்மொழி ஆளுமை மிக்கவராக, அன்புடன் அனைவரையும் அரவணைக்கும் பண்பாளராக திகழ்ந்தவர்.

இவ்வாறு இந்துக் குருமார் அமைப்பு இரங்கல் தெரிவித்துள்ளது.

இந்துக் குருமார் அமைப்பின் தலைவர் சிவாகம கலாநிதி, சிவஸ்ரீ கு.வை. க. வைத்தீஸ்வர குருக்கள், செயலாளர் சிவஸ்ரீ ச. சாந்தரூப குருக்கள் ஆகியோர் இணைந்து விடுத்துள்ள இரங்கல் செய்தியில் இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

கனடா, ஆஸ்திரேலியா, தென் ஆப்பிரிக்கா, மலேசியா, சிங்கப்பூர் உள்ளிட்ட பல்வேறு நாடுகளில் உள்ள சைவ ஆலயங்களில் நடைபெறும் சிறப்பு கிரிகைகளில் பங்கேற்புடன் ஆலோசனைகளையும் வழங்கியவர்.

பல சிறப்பு வாய்ந்த குருமார்களை உருவாக்கிய பெருமைக்குரியவர். அவரது இழப்பு மிகவும் கவலையை அளித்துள்ளது.

அமரரது ஆத்ம சிவப்பிராப்திக்கு இந்துக் குருமார் அமைப்பின் சார்பில் இறை பிரார்த்தனை செய்கிறோம். அத்துடன் உறவுகளுக்கு எமது



ஆறுதலை பகிர்ந்து கொள்கிறோம் என்று இரங்கல் செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# யாழில் கூரையைப் பிரித்து வீட்டுக்குள் நுழைந்து நகைகளைத் திருடிய 20 வயது இளைஞர் கைது!

யாழ்ப்பாணத்தில் வீடொன்றின் கூரையைப் பிரித்து உட்புகுந்து நகைகளைத் திருடிய குற்றச்சாட்டில் 20 வயதுடைய இளைஞர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேகநபர், ஏழாலை தெற்கு பகுதியில் உள்ள வீடொன்றில் வசித்தவர்கள் வெளியில் சென்ற சமயம், வீட்டின் கூரை ஓடுகளை அகற்றி, உட்புகுந்து வீட்டில் இருந்த 10 பவுண் நகைகள் மற்றும் ஒரு தொகைப் பணம் என்பவற்றைத் திருடிச் சென்றுள்ளார்.

சம்பவம் தொடர்பில் வீட்டாரால் சுன்னாகம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டதையடுத்து விசாரணைகளை முன்னெடுத்த பொலிஸார் அந்தப் பகுதியைச் சேர்ந்த 20 வயதுடைய இளைஞரைக் கைது



செய்தனர்.

சந்தேகநபரைப் பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைத்து விசாரணைகளை முன்னெடுத்த பொலிஸார், திருடிய நகைகளை இளைஞரிடம் இருந்து மீட்டுள்ளனர்.

அதனைத் தொடர்ந்து இளைஞரை மல்லாகம் நீதிவான் நீதிமன்றத்தில் முற்படுத்தப் பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்

259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## புதிய மொந்தையில்.....!

புதுப் பாதையில் பயணிக்கப் போகின்றோம் என்று கூறிக் கொண்டு அதிகாரத்துக்கு வந்த தேசிய மக்கள் சக்தி அரசும் 'பழைய குருடி கதவைத் திறவடி' என்ற பாணியில் முன்னைய அரசுகளின் அதே முரட்டுப் பாதைக்குள்தான் இறங்கியிருக்கின்றது.

எதிர்க்கட்சியில் இவ்வளவு காலமும் இருந்தபோது மிக மோசமாக விமரிசித்த – அடியோடு களையப்பட வேண்டும் என்று அறுதியிட்டுக் கூறி வந்த – பயங்கரவாதத் தடைச் சட்டத்தை இப்போது காவிச் சுமக்கும் ஆட்சியாக மாறியிருக்கின்றது இந்த ஆளும் தரப்பு.

அந்தக் கொடூரச் சட்டம் – மனித குல விழுமியங்களுக்கும், மனித நாகரிகப் பண்பியல்புகளுக்கும் மாறான பயங்கரமான அந்தச் சட்டம் – அடியோடு ஒழிக்கப்பட வேண்டும், முற்றாக மாற்றப்பட வேண்டும் எனத் தானும் சேர்ந்து இதுவரை காலமும் வெளிப்படுத்தி வந்த உறுதியான நிலைப்பாட்டிலிருந்து தேசிய மக்கள் சக்தி மெல்லச் சறுக்கத் தொடங்கி விட்டது என்பது உறுதியாகி வருகின்றது.

ஆட்சிக்கு வருவதற்கு முன்னரும் கூட, ஜனாதிபதித் தேர்தல் மற்றும் நாடாளுமன்றத் தேர்தல் மேடைகளில் பயங்கரவாத தடைச் சட்டத்தின் கொடூரப் பிடியில் சிக்கி, மூடிய சிறைச் சுவர்களுக்குள் முடக்கப்பட்டுக் கிடக்கும் அரசியல் கைதிகளை விடுதலை செய்வதாகவும், பயங்கரவாத தடைச் சட்டத்தை நீக்குவதாகவும் பல வாக்குறுதிகளை வழங்கியிருந்தது தற்போதைய ஆளும் தரப்பு.

எனினும், புதிய ஜனாதிபதி அதிகாரத்துக்கு வந்து இரண்டரை மாதங்கள் கடந்த தற்போது வரையில் பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் கைதுகளே இடம்பெறுள்ளன. யாரும் விடுவிக்கப்படவில்லை.

1979ஆம் ஆண்டில் கொண்டுவரப்பட்ட இந்தப் பயங்கரவாத தடைச் சட்டம் மிகக் குரூரமானது, கொடூர மானது, மனித வாழ்வியல் முறைமைகளுக்கு மாறான சட்ட வரையறைகளுடன் கூடிய இழிவுப் பண்புகளைக் கொண்டது என்ற உண்மைகளை எல்லாம் ஐ.நா. மனிதவுரிமைகள் கவுன்ஸில் வரையான உலக மன்றங்களில் இலங்கைப் பிரதிநிதிகள் பகிரங்கமாக ஒப்புக் கொண்ட பின்னரும் கூட, இந்தச் சட்டத்தை இலங்கையில் நீடிக்கச் செய்வது இலங்கைத் தீவில் நிலவுவது மனிதாபிமான ஆட்சியல்ல, அதன் பெயரிலான காட்டாட்சி என்பதையே உலகுக்கு எடுத்துரைத்து உறுதிப்படுத்தும்.

அதிகாரத்துக்கு வரும் வரையில் இந்தச் சட்டத்தின் மிக மோசமான விதிமுறைகளையும், மனிதப் பண்பியல் புகளுக்கு மாறான காட்டுமிராண்டித்தன சரத்துகளையும் தூக்கிப் பிடித்துக் கதறும் தென்னிலங்கை அரசியல் தலைமைகள், தாம் அதிகாரத்துக்கு – ஆட்சிக்கு – வந்ததும், அந்தப் பதவி சுகத்தை ருசிப்பதற்கு வசதியாக அந்தச் சட்ட விதிகளை மறந்தே விடுகின்றார்கள். அது வழமை.

இந்தப் புதிய ஆட்சிப் பீடமும் அதற்கு விதிவிலக்கல்ல.

புதிய அரசு இப்போதைய சில விடயங்களுக்கு இந்தப் பயங்கரவாதத் தடைச் சட்டத்தைப் பயன்படுத்து வதற்குக் கூறும் காரணங்கள் நொண்டிச் சாட்டுகள். அற்பத்தனமானவை. அவை சாதாரண சட்டங்களினால் கையாளக்கூடிய விடயங்கள்.

சிறிய பாம்பை பயங்கரவாதத் தடைச் சட்டம் என்ற நெடுங்கோல் கொண்டு அடிக்க முற்படும் தேசிய மக்கள் சக்தி அரசு அதன் மூலம் தானும் இதுவரை ஆட்சியில் இருந்த பிற்போக்குவாத அரசுகளின் பட்டியலைச் சேர்ந்ததே, புதிய புரட்சிச் சிந்தனையும், புதிய பார்வையும் போக்கும் கொண்ட புத்துயிர்ப்பு அரசே அல்ல என்பதையும் உறுதிப்படுத்தி நிற்கின்றது. அவ்வளவே.



# தாயின் இரண்டாவது கணவனால் கொலை செய்து வீசப்பட்ட சிறுமி!

## கழிவறைக் குழியில் சடலம் மீட்பு

14 வயது சிறுமி ஒருவர் கொலை செய்யப்பட்டு கழிவறைக் குழியில் வீசப்பட்ட சம்பவம் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

கம்பஹா, அகரவிட்ட பிரதேசத்தைச் சேர்ந்த பெண்ணொருவர் கடந்த திங்கட்கிழமை (02) முதல் தனது 14 வயது மகளை காணவில்லை என்று நேற்று (05) பொலிஸில் முறைப்பாடு செய்துள்ளார்.

நேற்றிரவு நடத்திய விசாரணையில் கொலைக்கான அடிப்படை காரணத்தை பொலிஸார் கண்டுபிடித்துள்ளனர்.


இந்தக் கொலையில் தனது இரண்டாவது கணவர் மீது சந்தேகம் இருப்பதாக சிறுமியின் தாய் தெரிவித்துள்ளார்.

இதன்படி, குறித்த பெண்ணின் இரண்டாவது கணவர் சந்தேகத்தின் அடிப்படையில் கைது செய்யப்பட்டுள்ளார்.

அவர் கூறிய தகவலின்படி, சந்தேக நபர் சிறுமியை கொலை செய்து, புதிதாக நிர்மாணிக்கப்பட்டு வரும் வீட்டின் பின்புறத்திலுள்ள கழிப்பறையில் சடலத்தை வைத்து கொங்கிரீட் பலகையால் மூடியிருப்பது தெரியவந்தது.

சம்பவம் நடைபெற்ற இடத்தில் பொலிஸார் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டுள்ளதோடு, மேலதிக விசாரணைகளையும் மேற்கொண்டு வருகின்றனர்.




# சந்நிதியான் ஆச்சிரம வாராந்த நிகழ்வில் ஆலய அபிவிருத்திக்கு 2 லட்சம் ரூபா நிதி!

யாழ்ப்பாணம், வடமராட்சி, தொண்டைமனாறு சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவையின் ஏற்பாட்டில் வாரந்தம் இடம் பெறும் நிகழ்வு இன்று வெள்ளிக்கிழமை சந்நிதியான் ஆச்சிரம முதல்வர் கலாநிதி மோகனதாஸ் சுவாமிகள் தலைமையில் இடம் பெற்றது.

இதில் ஆன்மீக அருளுரையை "குருவாய் வருவாய்" என்ற ஆன்மீகத் தலைப்பில் அதிபர் திருமதி கவிதா லலீசன் நிகழ்த்தினார்.

இதேவேளை, யாழ்ப்பாணம், நல்லூர், செல்லர் வீதியில் அமைந்துள்ள ஸ்ரீ ஜமுனாம்பிகா சமேத சிவசங்கரனார் திருக்கோவில் (பூதவராயர்) ஆலய கட்டட பணிக்காக 2 லட்சம் ரூபா நிதியும் வழங்கப்பட்டது.

அத்துடன் மல்லாகம் தெற்கு மகளிர் கிராம அபிவிருத்தி சங்கத்தினரின் கோரிக்கைக்கு அமைவாக, கிணறுகள் தூய்மைப்படுத்துவதற்காக 01 பரல் குளோரின் வழங்கி வைக்கப்பட்டது.



இந்த நிகழ்வில் சந்நிதியான் ஆச்சிரம தொண்டர்கள், சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டு பேரவையின் நிர்வாகிகள், தொண்டர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.



# அனர்த்தத்தின் போது பயன்படுத்துவதற்கு தேவையான பாதுகாப்பு மேலங்கி வழங்கல்

(ஏ.எல்.எம்.ஷினாஸ்)

வெள்ள அனர்த்தத்தின் போது, உயிர் ஆபத்துக்களை தவிர்க்கும் பாதுகாப்பு மேலங்கிகளை, தேசிய சமூக நீதிக்கான கட்சி வழங்கியுள்ளது.

இவற்றை வழங்கும் நிகழ்வு (04) மருதமுனையில் இடம்பெற்றது.

அண்மையில் காரைதீவு மாவடி பள்ளி பாலத்தில் வெள்ளநீரில் உழவு இயந்திரம் கவிழ்ந்து எட்டு பேர் உயிரிழந்த சம்பவம், அனர்த்த முன்னெச்சரிக்கைகளுக்கு நாம் தயாராக இருக்க வேண்டும் என்பதை மீண்டும் எமக்கு எடுத்துக் காட்டியுள்ளது.

இவ்வாறான அனர்த்தங்களைத் தவிர்க்கும் முகமாக காரைதீவு பிரதேச செயலகத்தின் அனர்த்த முகாமைத்துவ நிவாரண சேவைகள் பிரிவுக்கு இந்த பாதுகாப்பு மேலங்கிகள் ஒப்படைக்கப்பட்டன.

இந்த நிகழ்வில் தேசிய சமூக நீதிக்கான கட்சியின் தேசிய அமைப்பாளர் அர்க்கம் முனீர், கட்சியின் தேசிய தலைமைத்துவ சபை உறுப்பினர் இர்பான் பண்ணா, கல்முனை பிரதேச செயலகத்தின் முன்னாள் அனர்த்த நிவாரண சேவைகள் அபிவிருத்தி உத்தியோகத்தர் றாஸிக் நபாயிஸ் கலாச்சார அபிவிருத்தி உத்தியோகத்தர் ஏ.எல்.எம்.ஷினாஸ் மற்றும் ஊடகவியலாளர்கள் என பலர் கலந்து கொண்டனர்.

அனர்த்தங்கள் இடம்பெறும் பிரதேசங்களில் பொது மக்களை பாதுகாப்பதற்குத்தேவையான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை பிரதேசசெயலகங்கள் துரிதப்படுத்த வேண்டும். அனர்த்த முகாமைத்துவ பிரிவுகள் உருவாக்கப்பட வேண்டும். இதற்கு தேவையான நடவடிக்கைகள் முன்னெடுக்கும் பட்சத்தில் உயிர் இழப்புகளை தவிர்க்க முடியும் என்றும் தேசிய சமூக நீதிக்கான கட்சியின் தேசிய அமைப்பாளர் அர்க்கம் முனீர் தெரிவித்தார்.

கிட்டங்கி – மாவடிப்பள்ளி அனர்த்தத்தின் போது, குறித்த உழவு இயந்திரத்தில் பயணித்து உயிர் தப்பி வந்த ஆர். எம். ரீபா இந்த மேலங்கிகளை உத்தியோக பூர்வமாக வழங்கி வைத்தார்.





# நல்லிணக்கம், உள்வாங்கல் தொடர்பில் பயிற்சிப்பட்டறை நுவரெலியாவில்

(ஆ.ரமேஸ்)

நல்லிணக்கம், உள்வாங்கல் மற்றும் ஓரம்கட்டப்படல் தொடர்பாக ஆய்வு முறைகள் எனும் தொணிப் பொருளில் இலங்கை தேசிய சமாதான பேரவை ஒரு நாள் பயிற்சிப்பட்டறை நுவரெலியாவில் நடத்தியது.

நுவரெலியா சம்பத் விடுதியில் நடத்தப்பட்ட இந்த பயிற்சிப் பட்டறையில் சர்வமத குருமார்கள், அரச திணைக்கள ஊத்தியோகஸ்த்தர்கள், சமூக நலம் சார்ந்த அமைப்பினர், புத்திஜீவிகள், இளைஞர்கள், பெண்கள் அமைப்பினர் மற்றும் ஊடகவியலாளர்கள் என பலர் கலந்துக்கொண்டனர்.

இவ்வாறு இடம்பெற்ற இப் பயிற்சியில் கலந்து கொண்டோருக்கு உள்வாங்கல், நல்லிணக்கம் மற்றும் சமூக நீதிக்கான பல்வித செயற்பாட்டுக் கருதிட்டத்துக்கு அமைவாக பயிற்சியைச் சிரேஷ்ட சுயாதீன ஆய்வாளர் சசீத்தனுஷ்கசில்வா மற்றும் இலங்கை தேசிய சமாதான பேரவையின் நிகழ்ச்சி திட்ட பணிப்பாளர் அயோஷா ஜெயவர்தன மற்றும் மாவட்ட இணைப்பதிகாரி இரேஷா உதயனி ஆகியோர் வழங்கினர்.

அத்துடன் இந்தப் பயிற்சிப் பட்டறையில் இனங்களுக்கு இடையில் நேரடி வன்முறைகள், கலாச்சார ரீதியான வன்முறைகள், மதங்கள் தொடர்பான கரிசனைகள் தொடர்பாகவும் நல்லிணக்கம் தொடர்பாகவும் வெளிப்படையான கலந்துரையாடல்களும் இடம்பெற்றன.





# சாய்ந்தமருது விளையாட்டுக் கழகங்களது உபகரணங்கள் வெள்ளத்தால் நாசமாகின

(நூருல் ஹுதா உமர்)

அண்மையில் ஏற்பட்ட வெள்ளத்தால் அம்பாறை மாவட்ட தாழ்நிலங்கள் வெள்ளத்தில் சிக்கி கடுமையான பாதிப்புகளை சந்தித்தது. அதன் ஒரு பகுதியாக சாய்ந்தமருது அஸ்ரப் ஐக்கிய விளையாட்டு மைதானம் வெள்ளத்தில் முழுமையாக மூழ்கிக் குளம் போன்று வெள்ளநீராலும், சல்பினியாக்களாலும் நிறைந்து காட்சியளித்தது.

இந்தமைதான களஞ்சியசாலையில் வைக்கப்பட்டிருந்த சாய்ந்தமருது பிரதேச 16 விளையாட்டுக் கழகங்களின் விளையாட்டு உபகரணங்கள் வெள்ளத்தில் மூழ்கி பாவனைக்கு உதவாது அழிவடைந்துள்ளன.

மிகப் பெறுமதி வாய்ந்த கடின பந்து துடுப்பு மட்டைகள் அழிவடைந்து உடையும் நிலையில் உள்ளன.

மேலும் கடின பந்து விளையாட்டுக்கு பயன்படுத்தப்படும் ஆடுகள விரிப்பு வெள்ளத்தில் மூழ்கி பாவனைக்கு பொருத்தமற்றதா உள்ளது. 20 லட்சத்துக்கும் அதிக பெறுமதியுடைய இந்த விளையாட்டு உபகரணங்களின் அழிவால் சாய்ந்தமருது விளையாட்டுத்துறை அசௌகரியத்தை எதிர்நோக்கியுள்ளது.

கல்முனை மாநகர சபை உட்பட அரச திணைக்களங்கள்



இந்த மைதானத்தை வீரர்கள் பயன்படுத்தும் விதமாக துரிதமாக சீரமைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும், விளையாட்டு அமைச்சு மற்றும் திணைக்களம் என்பன விளையாட்டுக் கழகங்களின் இந்த அவல நிலையை போக்க உதவிகளை செய்ய முன்வர வேண்டும் என்றும் விளையாட்டுக் கழகங்களின் நிர்வாகங்கள் கேட்டுக்கொண்டுள்ளன.



# கிட்டங்கி, மாவடிப்பள்ளி பிரதேசத்தில் வலுவான தடுப்பு அமைக்க நடவடிக்கை

## வீதி அபிவிருத்தி அதிகார சபையிடம் கோரிக்கை

(மாளிகைக்காடு)

அம்பாறை மாவட்டம் கிட்டங்கி மற்றும் மாவடிப்பள்ளி பிரதேசத்தில் அடிக்கடி நடைபெறும் உயிரிழப்புக்களையும், விபத்துக்களையும் கட்டுப்படுத்த குறித்த பிரதேசங்களில் வீதிப் பாதுகாப்பு தடுப்புக்களை ஏற்படுத்துவதுடன் வீதியை அகலமாக்கும் நடவடிக்கைகளையும் முன்னெடுக்குமாறு ஸ்ரீலங்கா ஜனநாயக கட்சி, வீதி அபிவிருத்தி அதிகாரசபைக்கு கடிதமொன்றை அனுப்பியுள்ளது.

வீதி அபிவிருத்தி அதிகார சபை தவிசாளர் மற்றும் பணிப்பாளர் நாயகம் ஆகியோருக்கு அனுப்பி வைத்துள்ள கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

அம்பாறை மாவட்டத்தில் அண்மையில் ஏற்பட்ட வெள்ளப் பெருக்கு மற்றும் அதனைத் தொடர்ந்து ஏற்பட்ட மாவடிப் பள்ளி, கிட்டங்கி ஆகிய இரு இடங்களில் மாவடிப்பள்ளியில் 6 சிறுவர்கள் மற்றும் 2 பெரியவர்கள் மற்றும் அம்பாறை மாவட்டம் கிட்டங்கியில் ஒருவர் உட்பட 9 பேர் உயிரிழந்தமை வருத்தமளிக்கும் ஒன்றாகும். இது போன்று அடிக்கடி குறித்த பிரதேசங்களில் உயிரிழப்புக்கள் நடைபெறுவது வழமையாகி வருகிறது.

முக்கியமாக இந்த இந்த இரண்டு இடங்களின் பாலங்களில் எதிர்காலத்தில் விபத்துக்களையும், மரணத்தைத் தவிர்க்கும் விதமாக மாற்றி அமைக்கப்பட வேண்டியது மிகவும் முக்கியமாகும்.

மேலும், ஒவ்வொரு இடத்தின் இரு புறமும் பாலத்தில் இருந்து சாலை வரை 500 மீற்றர் தூரத்திற்கு வலுவான தடுப்புகள் அமைப்பதுடன், வெள்ள அளவைக் குறிப்பம் சிறந்தது.

எதிர்காலத்தில் இந்தப் பகுதி மற்றும் பிற பகுதிகளின் பயணிகளின் இத்தகைய மரணங்கள் இதனால் தவிர்க்கப்படும்.

ஒவ்வொரு ஆண்டும் பருவகால வெள்ளம் காரணமாக, இந்த இடங்களில் இதுபோன்ற சம்பவங்கள் துரதிர்ஷ்டவசமாக நடைபெறுகின்றன.

இப்படி பாதுகாப்பை வழங்கும் போது நீர் வழிந்தோட இடையூறு இல்லாமல் இருப்பதுடன் எதிர்காலத்தில் இப்பகுதி பயணிகளின் விபத்து மற்றும் மரணத்தைத் தவிர்க்க முடியும்.– என்றுள்ளது.

# குறிஞ்சிப்பிட்டியின் வீதி விளக்குகள் நீண்ட நாள்களுக்குப் பின் திருத்தம்

(கற்பிட்டி எம் எச் எம் சியாஜ்)

கற்பிட்டி குறிஞ்சிப்பிட்டி பகுதியில் கூடுதலான வீதி விளக்குகள் நீண்ட நாள்களாகப் பழுதடைந்து திருத்தப்படாமல் காணப்பட்டன.

இது விடயமாக கற்பிட்டி பிரதேச சபைக்கு பல்வேறு முறைப்பாடுகள் தெரிவிக்கப்பட்டுள்ள போதும் அவைகளுக்கான வாகன வசதிகளும் மின் குமிழ்களுக்கான நிதி ஒதுக்கீடுகளும் இல்லை என்று தெரிவிக்கப்பட்டு வந்தது.

இந்த நிலையில் குறிஞ்சிப்பிட்டி சமூக ஆர்வலரும் வளர்ந்து வரும் அரசியல் வாதியுமான ஏ.ஆர் ஜெஸ்பர் மேற்கொண்ட தொடர் முயற்சியின் காரணமாக குறிஞ்சிப்பிட்டி பகுதியில் பழுதடைந்த வீதி லாம்புகளை மாற்றியமைக்கப்பட்டன.

கற்பிட்டி பிரதேச சபையின் செயலாளர் மூலம் 15 புதிய மின் குமிழ்கள் கிடைக்கப் பெற்ற நிலையில் தனது சொந்த வாகனத்தின் ஊடாக கற்பிட்டி பிரதேச சபையின் பொறியியலாளரின் உதவியுடன் குறிஞ்சிப்பிட்டி பகுதியின் பழுதடைந்த மின் குமிழ்கள் திருத்தியமைக்கப்பட்டுள்ளதாக ஏ.ஆர். ஜெஸ்பர் தெரிவித்தார்.





# பசுமை புரட்சி செய்யும் மின்மினிக்கு பசுமை விதை செம்மல் விருது

(நூருல் ஹுதா உமர்)

இந்தியா, தமிழ்நாடு, திண்டுக்கல் மாவட்ட “பசுமை வாசல் பவுண்டேஷன்” அமைப்பின் ஐந்தாம் ஆண்டு ஆரம்ப விழாவை முன்னிட்டு சர்வதேச ரீதியில் நடத்தப்பட்ட மரக்கன்றுகள் நடும் போட்டியில் வெற்றி பெற்ற கல்முனை அல்-அர்சத் மகா வித்தியாலயத்தில் தரம் எட்டில் கல்வி கற்று வரும் இலங்கையின் இளம் பசுமை மீட்சி செயற்பாட்டாளர் மின்மினி மின்ஹா “பசுமை விதை செம்மல் விருது-2024” வழங்கி கௌரவிக்கப்பட்டுள்ளார்.

இவர் தனது 10 வயதிலிருந்து மாவட்ட, தேசிய மட்ட, சர்வதேச மட்டங்களில் 25 இற்கும் மேற்பட்ட விருதுகளையும், கௌரவ பட்டங்களையும் பெற்றுக் கொண்ட சிறுமி ஆவார்.

10 லட்சம் நபர்களை இலக்காக கொண்டு “சுற்றுச்சூழல் தொடர்பான விழிப்புணர்வு உரையை நிகழ்த்தி வரும் ஆசிய நாடுகளில் மிக வயது குறைந்த சிறுமி” என்ற சாதனைக்கு உரிய இவர் சுயாதீன முறையில் கல்வி, நிர்வாக உயரதிகாரிகளின் அனுமதியுடன் சுற்று சூழல் தேசிய வேலைத் திட்டத்தின் ஓரங்கமாக பாடசாலை மாணவர்கள், அரச அதிகாரிகள் முன்னிலையில் விழிப்புணர்வு உரையையும் மேற்கொண்டு வருகிறார்.








# சாய்ந்தமருது பிரதேசத்தில் புகை விசிறல் நடவடிக்கை !

(மாளிகைக்காடு)

சாய்ந்தமருது சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் ஜே .மதன் ' தலைமையிலான குழுவினர் நுளம்புகள் பெருகாத வண்ணம் புகை விசிறல் நடவடிக்கை மேற்கொண்டு வருகின்றனர்.

கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் டாக்டர் சகிலா இஸ்ஸதீனின் வழிகாட்டலில், சாய்ந்தமருது பிரதேசத்தில் வெள்ள அனர்த்தத்தின் பின்னர் சாய்ந்தமருது சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுக்குட்பட்ட பொலிவேரியன் கிராமத்தில் நுளம்புகள் பெருகாத வண்ணம் புகை விசிறல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

இந்த நடவடிக்கைகளில் பொதுச் சுகாதார பரிசோதகர்கள், டெங்கு களத்தடுப்பு பணியாளர்கள் ஈடுபட்டு வருகின்றனர்.





# திருமலை றோட்டரி கழகத்தால் இன்னலுற்ற மக்களுக்கான உதவி!

திருகோணமலை ரோட்டரி கழகத்தின் சார்பில், வரோதாய நகர் கிராம சேவகர் பிரிவில் வருமானம் இன்றி அல்லல்படும், சமீபத்தில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட 38 பேருக்கு நிவாரணப் பொருள்கள் வழங்கப்பட்டன.

இந்த நிகழ்வில் திருகோணமலை றோட்டறிக் கழகத்தின் தலைவர் ஜெகதீசன் , றோட்டறிக் கழக அங்கத்தவர்கள் கலந்து கொண்டதுடன் நிவாரணப் பொருள்களையும் வழங்கினர்.

இதற்குரிய அனுசரணையை திருகோணமலை றோட்டரி கழகத்துடன் இணைந்து, ஆஸ்திரேலியாவை சேர்ந்த விக்கினராஜா வழங்கினார்.









# 3 லட்சத்து 75 ஆயிரம் ரூபா பெறுமதியான வெள்ள நிவாரணம் கந்தரோடை மக்களுக்கு



சந்நிதியான் ஆச்சிரமம் சுன்னாகம் கந்தரோடை கிராமத்துக்கு 3 லட்சத்து 75 ஆயிரம் ரூபா பெறுமதியான வெள்ள நிவாரண உதவிகளை நேற்று (05) வழங்கியுள்ளது.

இயற்கை பேரிடரால் பாதிக்கப்பட்ட யாழ்ப்பாணம் - கந்தரோடை, இக் கிரானை கிராமசேவையாளர் பிரிவு களான ஜே-212, ஜே-200 ஆகிய கிரா மங்களில் தெரிவு செய்யப்பட்ட 75 குடும்பங்களுக்கு இந்த உதவிகள் வழங்கப்பட்டுள்ளன.

இக்கிரானை துர்க்கா சனசமூக நிலையத்தில் வைத்து இந்தப் பொருள் கள் வழங்கப்பட்டன.

சனசமூக நிலைய தலைவர் ஆ.சந்திரமோகன் தலைமையில் இடம் பெற்ற இந்த உதவித் திட்டத்தை சந் நிதியான் ஆச்சிரம முதல்வர் கலாநிதி மோகனதாஸ் சுவாமிகள், தொண் டர்களுடன் நேரடியாகச் சென்று வழங்கி வைத்தார்.



# சட்ட விரோதமான முறையில் மாணிக்கக்கல் அகழ்ந்தவர் பொகவந்தலாவவில் கைது!

(மஸ்கெலியா நிருபர் )

சட்ட விரோதமான முறையில் மாணிக்கக் கல் அகழ்வில் ஈடுபட்டு வந்த நபர் ஒருவர் நேற்று மாலை கைது செய்யப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் நேற்று (05) பொகவந்தலாவ பொலிஸ் பிரிவில் உள்ள டின்சின் நகரில் இடம் பெற் றுள்ளது.

நீண்ட நாள்களாக டின்சின் நகரில் சட்ட விரோதமான முறையில் நபர் ஒருவர் மாணிக்க கல் அகழ்வில் ஈடுபட்டு வந்துள்ளார்.

சுமார் 60 அடி ஆழமான குழி தோண்டி அதில் மாணிக்க கல் அகழ் வில் ஈடுபட்டு வருவதாக கிடைக்க பெற்ற இரகசிய தகவல்களை தொடர்ந்து சம் பவ இடத்துக்கு பொகவந்தலாவ பொலிஸ் நிலைய அதிகாரி நுவான் மற்றும் பொலிஸார் நேற்று மாலை சுற்றி வளைப்பை மேற்கொண்ட னர்.

இதன்போது சந்தேக நபர் ஒருவரை கைது செய்தனர். விசாரணைக்குப் பின்னர் ஹட்டன் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்படவுள்ளார் என்று பொலி ஸார் தெரிவித்தனர்.




# நீங்களும் வாழ்க்கையில் வெற்றி பெறலாம்...!

நைற்றா தேசிய பயிலுனர் கைத்தொழிற் பயிற்சி அதிகார சபை . இலங்கையில் பாடசாலைக் கல்வியை முடித்த மாணவர்களுக்கு பல்வேறு தொழிற் பயிற்சி நெறிகளை இலங்கை தேசிய பயிலுனர் கைத்தொழில் அதிகார சபை வழங்கிவருகிறது.

யாழ்ப்பாண மாவட்ட தேசிய பயிலுனர் பயிற்சி கைத்தொழிற் பயிற்சி அதிகார சபையின் யாழ்ப்பாண பிராந்திய பரிசோதகர் குகனுடன் மேற்கொண்ட நேர் காணலின் போது அவர் பின்வருமாறு கருத்து தெரிவித்தார்.

**கேள்வி:** தேசிய பயிலுனர் மற்றும் கைத்தொழிற் பயிற்சி அதிகாரசபை வழங்குகின்ற தொழில் பயிற்சி கற்கை நெறிகள் எவை?

**பதில்:** தேசிய தொழிற்கல்வி ஆணைக்குழுவால் அங்கீகரிக்கப்பட்ட 350 மேற்பட்ட கற்கை நெறிகளும் நைற்றா மூலம் வழங்கப்படுகின்றன. ஏனைய தொழிற் கல்வி நிறுவனங்களான வி.ரி.ஏ. கல்லூரி மற்றும் ஏனைய தனியார் தொழிற்கல்வி நிறுவனங்களில் குறிப்பிட்ட அளவிலான கற்கை நெறிகளுக்கு மாத்திரமே தொழிற் பயிற்சிகள் வழங்கப்படுகின்றன.

ஆனால் நைற்றாவின் மூலம் தேசிய தொழிற் கல்வி ஆணைக் குழுவால் அங்கிகரிக்கப்பட்ட கற்கை நெறிகள் அனைத்தையும் பயிலக் கூடிய வசதிகள் இலங்கை முழுவதிலும் உள்ள நைற்றா மாவட்ட மற்றும் கிளை நிலையங்களில் காணப்படுகின்றன.

**கேள்வி:** மூன்றாம் நிலை தொழிற்கல்வியை வழங்குவதில் தேசிய பயிலுனர் மற்றும் கைத்தொழிற் பயிற்சி அதிகார சபை பிரதானமானது. அந்தவகையில் நீங்கள் வழங்குகின்ற பயிற்சிகள் ஏனைய மூன்றாம் நிலை தொழிற் கல்வி நிலையங்களில் இருந்து எவ்வாறு வேறுபடுகிறது?

**பதில்:** நைற்றா மூலம் வழங்கப்படுகின்ற பயிற்சிகள் அனைத்தும் வேலைத்தளப்பயிற்சிகள் ஆகும். ஆனால் ஏனைய தொழிற் பயிற்சி நிலையங்களான வி.ரி.ஏ. கல்லூரி மற்றும் ஏனைய அரச சார்பற்ற நிறுவனங்கள் வழங்கும் பயிற்சிகள் வகுப்பறை பயிற்சிகளாகவும் அதனுடன் இணைந்த வேலைத் தளப் பயிற்சிகளாகவும் காணப்படுகின்றன. ஆனால் நைற்றா மூலம் வழங்கப் படும் பயிற்சிகள் பெரும்பாலனவை ஆரம்பத்தில் இருந்தே வேலைத் தளப் பயிற்சிகளாக வழங்



கப்படுகின்றன.

ஐ.சி.ரி. ரெக்னிக்கன் போன்ற ஒரு சில கற்கை நெறிகளுக்கு மாத்திரமே வகுப்பறை பயிற்சிகளும் அதன் பின்னர் வேலைத்தள பயிற்சிகளும் வழங்கப் படுகின்றன. குறிப்பாகத் திறனுள்ள தொழில் வினைஞர் ஒருவரின் கீழ் தொழிற்சாலை,வேலைத்தளம் மூலமாக பயிற்சியை பெற்றுக் கொள்ள முடியும். எனவே நைற்றா வழங்கும் தொழிற் பயிற்சி முறை ஆரம்பத்தில் இருந் தான வேலைத்தள பயிற்சியாக காணப்படுவதால் ஏனைய தொழிற் கல்வி நிலையங்களில் இருந்து வேறுபடுகிறது.

**கேள்வி:** பாடசாலை கல்வியை விட்டு இடைவிலகிய மாணவர் ஒருவர் ஏனைய தொழில் கல்வி நிலையங் களை விடுத்து நைற்றாவுடன் இணைவதற்கான பிரதான காரணமாக எவற்றைக் கூறுவீர்கள்?

**பதில்:** பாடசாலைக் கல்வியை விட்டு இடைவிலகிய வர் என்ற சந்தர்ப்பத்தில் அவர் வகுப்பறைக் கல்வியை விரும்பாதவராகவே இருப்பார். அவ்வாறனவர்கள் நைற்றாவில் பதிவு செய்து தமக்குப் பிடித்த கற்கை நெறிகளை ஆரம்பத்தில் இருந்தே வேலைத்தள பயிற்சியாக வேலைத் தளங்களுக்கு நேரடியாக சென்று 6 மாத காலத்திலோ அல்லது ஒரு வருடத்துக்கு உள்ளாகவோ நிறைவு செய்து என்.வி.கியூ. 4 மட்டத் தைப் பெற்றுக் கொள்ள முடியும்.

பெரும்பாலான பாடசாலையை விட்டு இடைவிலகிய மாணவர்கள் நைற்றாவில் இணைவதற்கான பிரதான காரணம் இதுவாக காணப்படுகிறது. நைற்றா மூலம் பயிற்சி பெற்று பல்வேறு துறைகளில் சொந்த தொழில்

தொடர்ச்சி ▼

# நீங்களும் வாழ்க்கையில் வெற்றி பெறலாம்...!

தொடர்ச்சி▲

முயற்சி தொடங்கியவர்கள் ஏராளமானோரை நமது யாழ்ப்பாண மாவட்டத்தில் என்னால் கூற முடியும்.

அதேபோல் வகுப்பறை கல்வியை விரும்பாத ஒருவர் நைற்றா மூலம் வேலைத்தள பயிற்சிகளை பெற்று என்.வி.கியூ. 5, 6 ஆகியவற்றை நிறைவு செய்து தமக்கு பிடித்த தொழிற் துறைகளில் டிப்போமா பட்டம் பெறுவதற்கான வாய்ப்புகளும் சுகாணப்படு கின்றன. கடந்த காலங்களில் பலர் இவ்வாறான முறை மூலம் பட்டம் பெற்றுள்ளனர். அவர்கள் அனைவரும் தற்போதைய சூழலில் சிறந்த தொழிலில் இருப்பதை எங்களால் அவதானிக்க முடிகிறது.

**கேள்வி:** நைற்றா என்று சொல்லப்படுகின்ற தேசிய பயிலுனர் கைத்தொழிற் பயிற்சி அதிகார சபையை பெரும்பாலான தொழில் செய்பவர்கள் நாடுவதற்கான ஆர்.பி.எல். முறை மூலமான என்.வி.கியூ. தகமை தொடர்பில் கூறுங்கள்?

**பதில்:** ஏனைய தொழிற் கல்வி நிலையங்களை பார்க்க நைற்றா ஊடாக பெருமளவிலானோர் ஆர்.பி.எல். முறை மூலமான என்.வி.கியூ. தகைமையைப் பரிசோதனை அடிப்படையில் பெற்றுக் கொள்கிறார்கள்.

ஆர்.பி.எல். என்பது முன்கற்கை மதிப்பீட்டு முறையின் ஊடான தொழிற்தகமை ஆகும். குறிப்பாகத் தொழில்களில் முன்னனுபவம் மற்றும் தொழில் திறன்களை கொண்டவர்களுக்கும், தொழிலுக்காக வெளிநாடு செல்ல எண்ணியிருப்போர் , தொழிலில் பதவி உயர்வு பெற எண்ணியிருப்போர், உயர் கல்வி டிப்ளோமா அல்லது பட்டம் கற்பதற்கு எண்ணியிருப் பவர்கள் போன்றோருக்கு ஆர்.பி.எல். முறை மூலமாக அவர்களது தொழிற்தகமை பரிசோதிக்கப்பட்டு என்.வி.கியூ. 4 தகைமை வழங்கப்படுகிறது . நைற்றா மூலம் அனைத்து கற்கை நெறிகளுக்குமான தொழில் தகைமை பரிசோதிக்கப்பட்டு இரண்டு வருட முன்ன னுபவம் இருந்தால் நேரடியாக ஆர்.பி.எல். 3 நான்கு வருட முன்னனுபவம் இருந்தால் ஆர்.பி.எல். 4 அவர்களது திறன்கள் பரிசோதிக்கப்படுவதன் மூலம் தகைமைச் சான்றிதழை இலகுவாகப் பெறமுடிவதால் தொழில்பரியும் பெரும்பாலோனோர் எங்களை நாடு கின்றனர்.

**கேள்வி:** மூன்றாம் நிலை தொழிற் கல்வி ஆணைக்குழுவால் வழங்கப்படுகின்ற என்.வி.கியூ. தொழில் கல்வி சான்றிதழின் முக்கியதுவம் என்ன ?

**பதில்:** என்.வி.கியூ. சான்றிதழ் உள்நாட்டில் மட்டும் அல்ல வெளிநாட்டிலும் வேலை வாய்ப்பை பெற்றுக் கொள்ளக் கூடிய அளவு சர்வதேச தரத்தில் ஏற்றுக் கொள்ளப்பட்ட தகைமைச் சான்றிதழாகக் காணபப்ப டுகிறது. இலங்கையில் என்.வி.கியூ. மட்டம் 7 இனை பூர்த்தி செய்த நபர் ஒருவர் இலங்கை அரச பல்கலைக் கழகங்களில் பட்டம் பெற்ற நபருடன் ஒப்பிடுகையில் எல்லா வகைகளிலும் வலுமிக்கவராகக் காணப்படுவார். காரணம் என்.வி.கியூ. முறை மூலம் பட்டம் பெறுபவர் செயன்முறை ரீதியான அனுபவம் கொண்டவராக காணப்படுவார். இலங்கையில் 25 பிரதான தொழில் துறையின் கீழ் 350 மேற்பட்ட தொழில் கற்கை நெறிகள் காணப்படுகின்றன. இவற்றில் பெரும்பாலான கற்கை நெறிகள் என்.வி.கியூ. மட்டம் 7 வரை பயின்று பட்டம் பெறுவதற்கான வாய்ப்புக்கள் காணப்படுகின்றன. யாழ்ப்பாணம் நைற்றா மூலமாக இலங்கையில் என்.வி.கியூ. முறை மூலம் பட்டம் பெறுபவர்கள் மிக அதிகம்.

**கேள்வி:** நைற்றா மூலம் தொழில் பயிற்சிகளைப் பெற்று வெளியேறுபவர்களின் வேலை வாய்ப்புக்கள் உள்நாட்டிலும் சர்வதேச தொழிற் சந்தையிலும் எவ்வாறனதாக காணப்படுகிறது?





**பதில்:** நைற்றா மூலம் தொழிற்பயிற்சிகளை பெற்று வெளியேறியவர்கள் என்.வி.கியூ. தகைமை ஊடகவே வெளியேறுகின்றனர். எனவே அவர்களுக்கு உள்நாட்டி லும் சர்வதேச தொழில் சந்தையிலும் வேலைவாய்ப் புக்களை பெற்றுக் கொள்ளக் கூடியதற்கான வாய்ப்புகள் ஏராளம் காணப்படுகின்றன.

என்.வி.கியூ. முறை மூலம் வெளியேறுபவர்கள் செயன்முறை ரீதியான அனுபவம் கொண்டவர்களாகவும் காணப்படுவதால் இலகுவில் தொழில் பயிற்சிக்கு ஏற்ற வேலைகளைப் பெற்றுக் கொள்ள முடியும். இவர்களுக்கு பல்கலைக்கழக பட்டதாரிகளைப் போல் பயிற்சிகளை வழங்க வேண்டிய தேவையில்லை. ஏன் எனில் இவர்கள் ஏற்கனவே பயிற்சி பெற்றே வெளியேறுகின்றனர் . அதனால் அதிளவான வேலை வாய்ப்புகள் தற்போதைய தொழில் சந்தையில் அவர்கள் பயிலும் கற்கை நெறிக்கேற்ப உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் காணப்படுகின்றன.

**கேள்வி:** நைற்றா மூலம் தொழிற் கற்கை நெறியை பயிலும் மாணவர்ளுக்கு வழங்கப்படுகின்ற சலுகைகள் எவை?

**பதில்:** தொழில் முறைப் பயிற்சியை நிறைவு செய்தவர்களுக்குச் செயல் திறன் கடன் திட்டத்தின் மூலமாக அரச வங்கிகள் ஊடாக 50 ஆயிரம் ரூபா முதல் 5 லட்சம் வரையான கடன் தொகைக்கு எளிதாக விண்ணப்பிக்கலாம். இதற்கான அடிப்படைத் தேவைப் பாடுகளாக தொழில் பயிற்சி சான்றிதழ் ஒன்றை பெற்றிருக்க வேண்டும் .

18-55 இடைப்பட்ட வயதினரும் இருத்தல் மற்றும் அதிகாரசபையால் நடத்தப்படும் தொழில் முனைவு திறன்கள் அபிவிருத்தி பயிற்சி வேலைத் திட்டத்தில் பங்குபற்றியிருத்தல் வேண்டும். கடத்தலுக்கு உத்தரவாத மளிக்க இருவர் இருத்தல் வியாபாரத்துக்கென அவசிய மாகும் பணத்தொகையில் 20 வீதம் நீங்கள் சுமத்தல் போன்றவற்றின் அடிப்படையில் செயல் திறன் கடன் வழங்கப்படுகிறது.

அதைவிட இலங்கை போக்குவரத்து சபையின் மாதாந்த பருவகால சீட்டைப் பெற்றுக் கொடுத்தல் உயர் கல்விக்கான வழிகாட்டுதல்களை வழங்குதல் போன்ற பல்வேறு சலுகைகள் மாணவர்களுக்கு வழங் கப்படுகின்றன.

**ம.கலைச்செல்வன்,**
**ஊடகக் கற்கைகள் துறை,**
**யாழ். பல்கலைக்கழகம்.**

# பங்களாதேஷ் எல்லையில் இந்தியா தீவிர கண்காணிப்பு





மேற்கு வங்கம் அருகே துருக்கியில் தயாரிக்கப்பட்ட ஆளில்லா விமானங்களை டாக்கா நிலைநிறுத்தியுள்ளதாக வெளியான தகவலைத் தொடர்ந்து, பங்களாதேஷ் எல்லையில் இந்தியா கண்காணிப்பு நடவடிக்கைகளை தீவிரப்படுத்தியுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஷேக் ஹசீனாவின் அவாமி லீக் அரசாங்கத்தின் வீழ்ச்சிக்குப் பின்னர், எல்லைப் பகுதிகளில் பயங்கரவாத நடவடிக்கைகள் அதிகரித்துள்ளதன் பின்னணியில் இந்த அறிவிப்பு வந்துள்ளது.


இந்திய எல்லைக்கு அருகில் பைரக்தார் TB2 ஆளில்லா விமானங்கள் நிலைநிறுத்தப்படுவது குறித்த அறிக்கைகளை இராணுவம் சரிபார்த்து வருவதாக தகவல்கள் தெரிவித்தன.

இந்த ஆளில்லா விமானங்கள் உளவுத்துறை, கண்காணிப்பு, உளவுப் பணிகளுக்காக பங்களாதேஷின் 67 ஆவது இராணுவத்தால் இயக்கப்படுகின்றன.

பங்களாதேஷ் பாதுகாப்பு நோக்கங்களுக்காக இவற்றை இயக்குவதாக கூறினாலும், அத்தகைய மேம்பட்ட ட்ரோன்களை ஒரு முக்கியமான பகுதியில் நிலைநிறுத்துவதன் அவசியம் குறித்தும் கேள்விகள் எழுப்பபட்டுள்ளன.

ஹசீனாவின் ஆட்சிக் காலத்தில் ஒடுக்கப்பட்ட தீவிரவாதக் குழுக்கள், தற்சமயம் இந்திய எல்லைக்கு அருகில் உள்ள பகுதிகளில் மீண்டும் எழுந்துள்ளதாக இந்திய பாதுகாப்பு தகவல்கள் தெரிவிக்கின்றன.

பங்களாதேஷில் நிலவும் அரசியல் ஸ்திரமின்மையை பயன்படுத்தி பயங்கரவாத குழுக்களும், கடத்தல் வலையமைப்புகளும் இந்தியாவுக்குள் ஊடுருவி வருவதாகவும் அது குறிப்பிடுகின்றன.



# அசாம் மாநிலத்தில் மாட்டிறைச்சியை விற்பனை செய்வதற்கும் நுகர்வதற்கும் தடை

இந்தியாவின் அசாம் மாநிலத்தில் உணவகங்கள் மற்றும் பொது இடங்களில் மாட்டிறைச்சியை விற்பனை செய்வதற்கும் நுகர்வதற்கும் தடை விதிக்கப்பட்டுள்ளது.

இந்தக் கட்டுப்பாடு மாநிலம் முழுவதுமுள்ள உணவகம், விடுதிகள் மற்றும் உள்ளூர் கொண்டாட்ட நிகழ்வு உள்ளிட்ட அனைத்துக்கும் பொருந்தும் என மாநில முதல்வர் ஹிமந்தா பிஸ்வா ஷர்மா குறிப்பிட்டுள்ளார்.

உடன் அமுலுக்கு வரும் வகையில் இந்த தடையுத்தரவு பிறப்பிட்டுள்ளது.

இதனை மீறும் பட்சத்தில் 8 ஆண்டுகள் வரை தண்டனை விதிக்கப்படும் எனவும் எச்சரிக்கப்பட்டுள்ளது.

முதல்வர் தலைமையில் நடைபெற்ற அமைச்சரவை கூட்டத்தில் மாட்டிறைச்சி உண்பது தொடர்பாக தற்போதுள்ள சட்டத்தில் திருத்தம் செய்து புதிய விதிகளை இணைத்துக் கொள்ள தீர்மானிக்கப்பட்டிருந்தது.

ஏற்கனவே மாநிலத்திலுள்ள வழிபாட்டு தலங்களை சூழ 5 கிலோமீற்றர் பகுதிகளுக்கு மாட்டிறைச்சி விற்பனைக்கு தடை விதிக்கப்பட்டுள்ளது.

அசாம் மாநிலத்தில் தற்போது ஹிமந்தா பிஸ்வா சர்மா தலைமையிலான பா.ஜ.க. ஆட்சி நடைபெற்று வருவது குறிப்பிடத்தக்கது.

இந்த தடைக்கு எதிர்க்கட்சியினர் கடும் எதிர்ப்பு தெரிவித்து வருகின்றனர்.






# அவுஸ்திரேலியாவின் மெல்போர்னில் யூத தேவாலயத்துக்கு தீ வைப்பு

அவுஸ்திரேலிய நகரமான மெல்போர்னில் இன்று வெள்ளிக்கிழமை அதிகாலையில் முகமூடி அணிந்த விசமிகள், அங்கு அமைந்துள்ள யூத தேவாலயத்துக்கு தீ வைத்துள்ளனர்.

இது நாடு முழுவதும் பரவலான கண்டனத்தைத் தூண்டியது.

அடாஸ் இஸ்ரேல் ஜெப ஆலயத்தில் அந் நாட்டு நேரப்படி வெள்ளிக்கிழமை அதிகாலை 4:10 மணிக்கு (1710 GMT) சில பக்தர்கள் உள்ளே இருந்தபோது தீ வைக்கப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

இதனால், தென்கிழக்கு மெல்போர்ன் புறநகர் ரிப்போன்லியாவில் உள்ள கட்டிடத்தின் பெரும்பகுதி எரிந்து தீக்கிரையாகியதாக பொலிஸார் தெரிவித்தனர்.



இதனால், எவருக்கும் கடுமையான காயங்கள் எதுவும் ஏற்படவில்லை என ஆரம்பக் கட்ட தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்த தாக்குதலுக்கு கண்டனம் தெரிவித்துள்ள பிரதமர் அந்தோனி அல்பானீஸ், அவுஸ்திரேலியாவில் யூத எதிர்ப்புக்கு இடமில்லை என்றார்.

அதேநேரம், ஒரு வழிபாட்டுத் தலத்தில் இந்த வன்முறை, அச்சுறுத்தல் என்பது மூர்க்கத்தனமானது. இந்த தாக்குதல் உயிர்களை ஆபத்தில் ஆழ்த்தியுள்ளது மற்றும் சமூகத்தில் அச்சத்தை உருவாக்குவதை தெளிவாக நோக்கமாகக் கொண்டுள்ளதும் அவர் குறிப்பிட்டார்.

விக்டோரியா மாநில பொலிஸாரும் பயங்கரவாத எதிர்ப்பு பொலிசாரும் கூட்டிணைந்து இது தொடர்பான விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.



# வடக்கு கலிபோர்னியாவில் சக்திவாய்ந்த நில அதிர்வு

வடக்கு கலிபோர்னியா கடற்கரை பகுதியில் 7.0 ரிக்டர் அளவில் சக்திவாய்ந்த நில அதிர்வு ஏற்பட்டுள்ளதாக அமெரிக்க புவியியல் ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

சான் பிரான்சிஸ்கோவிற்கு வடக்கே 260 மைல் தொலைவில் உள்ள கலிபோர்னியாவின் ஃபெர்ண்டேல் நகருக்கு மிக அருகில் இந்த நில அதிர்வு பதிவாகியுள்ளது.

இந்த நில அதிர்வினால் உயிரிழப்புகள் அல்லது பாரியளவிலான சேதம் ஏற்படாதபோதிலும், குடியிருப்புகளுக்குச் சேதம் ஏற்பட்டுள்ளதாக அந்த நாட்டு அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

உலகளாவிய ரீதியில் இந்த ஆண்டு தாக்கிய 7.0 ரிக்டர் அளவிலான ஒன்பதாவது நில அதிர்வு இதுவாகுமென வெளி நாட்டு ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

நில அதிர்வு ஏற்பட்டதை அடுத்து வடக்கு கலிபோர்னியா மற்றும் தெற்கு ஓரிகான் ஆகிய இரு நாடுகளின் கரையோரங்களில் ஆழிப்பேரலை எச்சரிக்கை விடுக்கப்பட்டு, பின்னர் இரத்து செய்யப்பட்டுள்ளது.

பக்கங்கள் 03

கனடா முரசு

வெள்ளிக்கிழமை 06/12/2024

## ரொறன்ரோ பெரும்பாக பகுதியில் வீடுகளின் விற்பனை அதிகரித்தது

ரொறன்ரோ பெரும்பாக பகுதியில் வீடு விற்பனை அதிகரித்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

கடந்த மாதம் இவ்வாறு வீடு விற்பனை அதிகரித்துள்ளதாக ரொறன்ரோ பிராந்திய வீட்டு மனை சபை தெரிவித்துள்ளது.

02






# கனடாவின் ஒன்றாரியோ மாகாணத்தில் நிமோனியா நோயாளர்கள் அதிகரிப்பு

**கனடாவின் ஒன்றாரியோ மாகாணத்தில் நிமோனியா நோயாளர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.**

**அண்மையில் வெளியிடப்பட்ட மருத்துவ அறிக்கை ஒன்றில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.**

**வாக்கிங் நிமோனியா என்று அழைக்கப்படும் நிமோனியா நுரையீரல் அலற்சி நோயினால் அதிகளவானோர் பாதிக்கப்படுகின்றனர் என தெரிவிக்கப்படுகிறது.**

கடந்த 2019 ஆம் ஆண்டுடன் ஒப்பீடு செய்யும்போது நிமோனியா நோயாளர்களின் எண்ணிக்கை இந்த ஆண்டில் மூன்று மடங்காக அதிகரித்துள்ளது.

ஒன்றாறியோ பொது சுகாதார அலுவலகம் இது தொடர்பிலான அறிக்கையை வெளியிட்டுள்ளது.

கடந்த வருடத்துடன் ஒப்பீடு செய்யும் போது இந்த வருடத்தில் நோயாளர் எண்ணிக்கையில் அதிகரிப்பு பதிவாகியுள்ளது.

காய்ச்சல், இருமல் மற்றும் சுவாசப்பை பிரச்சினைகள் இந்த நோயினால் ஏற்படும் என தெரிவிக்கப்படுகிறது.

எனினும் நிமோனியா காய்ச்சலை விடவும் இந்த நோய் ஆபத்து குறைந்தது என தெரிவிக்கப்படுகிறது.

இந்த நோய் பாக்டீரியா தாக்கத்தினால் ஏற்படுகின்றது என தெரிவிக்கப்படுகிறது.

# முதல் 5 ஆண்டுகள் கால சேவையை கியூபிக் பகுதியில் வழங்க வேண்டும்

## கனடாவில் மருத்துவர்களுக்கு எச்சரிக்கை

கனடாவின் கியூபிக் மாகாணத்தில் மருத்துவர்களுக்கு தங்களது சேவை தொடர்பில் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

கனடிய கியூபெக் மாகாண சுகாதார அமைச்சர் கிறிஸ்டியன் டுபே இந்த எச்சரிக்கையை விடுத்துள்ளார்.

மாகாணத்தினால் பயிற்றுவிக்கப்படும் மருத்துவர்கள் தங்களது முதல் ஐந்து ஆண்டு கால பகுதி சேவையை, கியூபிக் பொதுச் சுகாதார வலயமைப்பில் வழங்கத் தவறினால் அவர்களுக்கு அபராதம் விதிக்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.



இதன்படி, மேற்படி நிபந்தனையை பூர்த்தி செய்யத் தவறும் மருத்துவர்கள் நாள் ஒன்றுக்கு இரண்டு லட்சம் டாலர் அபராதத்தை செலுத்த நேரிடும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த கால நிபந்தனையை பூர்த்தி செய்ய முன்னதாக தனியார் துறையில் அல்லது மாகாணத்திற்கு வெளியில் மருத்துவ சேவையை வழங்கினால் அவர்களுக்கு இவ்வாறு தண்டனை விதிக்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

புதிய மருத்துவர் ஒருவரை பயிற்றுவிப்பதற்காக மாகாண அரசாங்கம் சுமார் நான்கரை லட்சம் டாலர்களை செலவிடுவதாகவும் வதிவிடத்திற்காக சுமார் 8 லட்சம் டொலர்களை செலவிடுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இவ்வாறு மக்களின் பணத்தை கொண்டு கற்றவர்கள் அவர்களுக்கு சேவை வழங்க வேண்டியது அத்தியாவசியமானது என தெரிவிக்கப்படுகிறது.






# கனடிய தபால் ஊழியர்கள் தொடர்ந்தும் புறக்கணிப்பில்

தபால் தபால் நிறுவன பணியாளர்கள் தொடர்ந்தும் பணிப்புறக்கணிப்பு போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

சுமார் மூன்று வாரங்களாக பணியாளர்கள் தொழிற்சங்கப் போராட்டத்தை முன்னெடுத்து வருகின்றனர்.

சம்பள அதிகரிப்பு உள்ளிட்ட சில காரணிகளை அடிப்படையாகக் கொண்டு இந்த பணிப்புறக்கணிப்பு போராட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

சுமார் 55000 பணியாளர்கள் இவ்வாறு போராட்டத்தில் ஈடுபட்டுள்ளார் என தெரிவிக்கப்படுகின்றது.

மத்திய அரசாங்கம் இந்த விவகாரத்தில் தலையீடு செய்ய திட்டமிட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

பண்டிகைக் காலத்தில் இவ்வாறு வேலை நிறுத்தப் போராட்டம் முன்னெடுக்கப்படுவதனால் வாடிக்கையாளர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்.










## றொறன்ரோ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கடந்த ஆண்டுடன் ஒப்பீடு செய்யும் போது இவ்வாறு வீடு விற்பனை அதிகரித்துள்ளது.

கடந்த நவம்பர் மாதம் றொறன்ரோ பெரும்பாக பகுதியில் 5875 வீடுகள் விற்பனை செய்யப்பட்டுள்ளன.

இது கடந்த ஆண்டு நவம்பர் மாதத்துடன் ஒப்பீடு செய்யும் போது சுமார் 40 வீத அதிகரிப்பாகும்.

கடந்த ஒக்டோபர் மாதத்துடன் ஒப்பீடு செய்யும் போது நவம்பர் மாதத்தில் வீடு விற்பனை இரண்டு வீதத்தினால் அதிகரித்துள்ளது. வீடுகளின் விற்பனை விலையானது கடந்த ஆண்டுடன் ஒப்பீடு செய்யும் போது சுமார் 2.6 வீதத்தினால் அதிகரித்துள்ளது.



# உலகளாவில் பேசுபொருளான கனடாவின் இணைய விளம்பரம்

கனடா, தற்போது அகதி அந்தஸ்த்து கோரும் செயன்முறை கடினமாக்கப்பட்டிருப்பதாக எச்சரிக்கும் வகையிலான இணையவழி விளம்பர பிரசாரமொன்றை உலகளாவிய ரீதியில் ஆரம்பித்துள்ளது.

இந்த விளம்பர பிரசாரமானது ஸ்பானியமொழி, உருது, உக்ரேனிய மொழி, இந்தி மற்றும் தமிழ் உள்ளடங்கலாக 11 மொழிகளில் எதிர்வரும் மார்ச் மாதம் வரை முன்னெடுக்கப்படவிருப்பதாக கனடாவின் குடிவரவுத்திணைக்களம் ‘ரொயிட்டர்’ செய்திச்சேவைக்குத் தெரிவித்துள்ளது.

அகதி அந்தஸ்த்து கோரலை மட்டுப்படுத்தும் நோக்கிலேயே பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ தலைமையிலான அரசாங்கத்தினால் இப்பிரசாரம் முன்னெடுக்கப்படவுள்ளது.

இந்த 4 மாத இணையவழி விளம்பர பிரசாரத்துக்காக கடந்த 7 வருடங்களுக்கும் மேலாக இதனைப்போன்ற விளம்பரங்களுக்காக செலவிடப்பட்ட மொத்தத்தொகையில் மூன்று பங்கு தொகை ஒதுக்கீடு செய்யப்பட்டிருப்பதாகவும் செய்திகள் வெளியாகியுள்ளன.

அதேவேளை சர்வதேச ரீதியில் புலம்பெயர்வோரையும், அகதிகளையும் பெரும் எண்ணிக்கையில் உள்வாங்கும் நாடாக இருந்துவரும் கனடாவில் இந்த அறிவிப்பு கனடாவுக்கு செல்வோருக்கும் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

# ஈ ஸ்கூட்டர், ஈ பைக் வகைகளை பயன்பாட்டுக்கு ரொறன்ரோ போக்குவரத்து ஆணைக்குழு தடை

ஈ-ஸ்கூட்டர் மற்றும் ஈ பைக் வகைகள் பயன்பாட்டுக்கு தடைவிதிப்பதாகரொறன்ரோ போக்குவரத்து ஆணைக்குழு அறிவித்துள்ளது.

லித்தியம் பேட்டரிகளை கொண்ட ஈ-ஸ்கூட்டர் மற்றும் ஈ-பைக் வகைகள் பொதுப் போக்குவரத்து சேவைகளில் கொண்டு செல்வதற்கு தடை விதிக்கப்பட்டுள்ளது.

மேலும் பஸ் மற்றும் ரயில் நிலையங்களிலும் இவற்றை தரித்து நிறுத்துவதற்கும் தடை விதிக்கப்பட்டுள்ளது.

இந்த குளிர்காலம் முழுவதும் இந்த தடை அமலில் இருக்கும் என அறிவிக்கப்பட்டுள்ளது. ஈ-ஸ்கூட்டர்கள் மற்றும் ஈ-பைக்களில் ஏற்படக்கூடிய ஆபத்துக்களை தடுக்கும் நோக்கில் இவ்வாறு தடை விதிக்கப்பட்ட உள்ளது.

